# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTARTION / COMMERCE (EXTERNAL) - 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## BBA / COM 37 (I) – AUDITING

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. நீர் பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றின் சிரேஷ்ட கணக்காய்வாளராகும். தற்போது நீர் வரையறுத்த பொதுக் கம்பனியொன்றின் கணக்காய்வில் ஈடுபடுகின்றீர். இப்பொதுக் கம்பனி கடந்த காலம் வேறொரு பட்டயக் கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

(அ) பொதுவாக கணக்காய்வில் மூன்று பகுதியினர் சம்பந்தப்பட்டுள்ளனர். அவர்கள் யாவர்? (02 புள்ளிகள்)

(ஆ) கம்பனிச் சட்டத்தின் பிரகாரம், கணக்காய்வாளராக நியமிக்கப்படத் தகுதியுள்ளவர்கள், தகுதியற்றவர்கள் யார் எனக் குறிப்பிடுக. அவர்கள் தகுதியற்றவர்களாகுவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(இ) வாடிக்கையாளர் நிறுவனத்தின் கணக்காய்வின்போது பெறப்பட்ட தகவல்கள் தொடர்பாக கணக்காய்வாளர் ஒருவரின் இரகசியம் தொடர்பான ஒழுக்கவியல் பொறுப்பு என்னவென்பதை விளக்குக. (03 புள்ளிகள்)

(ஈ) மேற்கூறப்பட்ட கூற்று தொடர்பாக இரகசியத்தை மீறுதல் தொடர்பாக உதாரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(உ) கணக்காய்வின்போது பெறப்பட்ட வாடிக்கையாளர் நிறுவனத்தின் தகவல்களை கணக்காய்வாளர் ஒருவர் வெளியிடும் ஐந்து (05) சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

02. (அ) கடன் விற்பனை தொடர்பான நான்கு (04) கட்டுப்பாட்டு நோக்கங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) சம்பளங்கள் கூலிகள் தொடர்பாக நீர் நிறைவேற்றக்கூடிய ஆழமான பகுப்பாய்வு செய்முறைகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக. ஒவ்வொரு செய்முறையிலும் நீர் எதிர்பார்க்கும் விடயம் என்னவெனக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(இ) அகக் கட்டுப்பாட்டு முறைமையின் வரையறைகள் நான்கினைச் (04) குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஈ) சம்பளங்கள் கூலிகள் கொடுப்பனவு தொடர்பாகக் காணப்படக்கூடிய சாத்தியமான அகக் கட்டுப்பாட்டு பலவீனங்களை முகாமைக் கடிதம் மூலமாக ஒரு வெளிக் கணக்காய்வாளர் என்ற ரீதியில் எழுதுமாறும், அந்த பலவீனங்களை நீக்குமுகமாக உமது பரிந்துரைகளையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

03. (i) கணக்காயவின்போது கணக்காய்வாளர் பல்வேறு மூலங்களிலிருந்து கணக்காய்வு ஆதாரங்களைத் தேடிக்கொள்கின்றார். கணக்காய்வாளர் தனது கட்டுப்பாட்டிலும் ஆதாரங்களை உருவாக்க முடியும், அதேவேளை சில ஆதாரங்களை முகாமையிடம் இருந்தும், மூன்றாம் நபர்களிடமிருந்தும் உருவாக்க முடியும். எவ்வாறாயினும், அவ்வாறு பெறப்பட்ட ஆதாரங்கள் பல்வேறு தரங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

(அ) கணக்காய்வின்போது அம்மூன்று பகுதியினராலும் உருவாக்கப்படும் ஆதாரங்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு (02) உதாரணங்கள் தருக. (04 புள்ளிகள்)

(ஆ) நம்பகரமான ஆதாரத்தையும், தொடர்புடைய ஆதாரத்தையும் உதாரணத்துடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) வாடிக்கையாளர்களுக்கு மிகக் குறைந்த நேரத்தில் கணனிகளை விநியோகிக்கக்கூடிய உற்பத்திக் கம்பனி ஒன்றின் கணக்காய்வுக்குப் பொறுப்பாக நீர் காணப்படுகின்றீர். அக்கம்பனி தனக்கென ஒரு பண்டகசாலையைக் கொண்டுள்ளது. உம்முடைய கணக்காய்வு முகாமையாளர் நிறுவனம் பற்றிய பூரண தகவல்களை சேகரிக்குமாறு உம்மைப் பணித்துள்ளர்.

(அ) வியாபார நிறுவனம் பற்றிய அறிவினைப் பெற நீர் பயன்படுத்தும் நான்கு (04) மூலங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ஆ) ஐந்தொகையில் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியமான கணக்காய்வுப் பகுதிகளை அடையாளம் காண்க. (04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

04. வரையறுத்த ABC நிறுவனத்தின் வருட இறுதிக் கணக்காய்வினை மேற்கொள்ளும் கணக்காய்வுக் குழுவின் ஓர் அங்கத்தவராக நீர் காணப்படுகின்றீர். ஒரு கணக்காய்வாளரால் வழங்கக்கூடிய பல்வேறு வகையான கணக்காய்வு அறிக்கைகளை விளக்குமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

(i) பின்வரும் கணக்காய்வு அறிக்கைள் கொடுக்கப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(அ) குறித்த விடயத்தை அழுத்தித் தெரிவித்தல்

(ஆ) முறிப்புடனான அபிப்பிராயம்
(இ) மறுதலிப்பு அபிப்பிராயம்
(ஈ) பாதகமான அபிப்பிராயம்

(08 புள்ளிகள்)

(ii) வரையறுத்த ABC உற்பத்திக் கம்பனி குறிப்பிடத்தக்களவு சரக்கு இருப்புகளையும், வியாபாரக் கடன்பட்டோரையும் 30 ஜூலை 2010 இல் உள்ளபடியான ஐந்தொகையில் கொண்டுள்ளது.

அவ் இரண்டு ஐந்தொகை விடயம் தொடர்பாக முகாமையினால் போதுமான தகவல்களை வழங்க் முடியாதுள்ளது. எனவே, உம்மால் போதுமான கணக்காய்வுச் செய்முறைகளை அச்சொத்துக்களின் மெய்ஆய்வு குறித்து மேற்கொள்ள முடியாமல் உள்ளது. அவ்இரு ஐந்தொகை விடயங்களும் மொத்த சொத்தில் 50 % இனை விட கூடுதலாகக் கொண்டுள்ளதை உம்மால் அவதானிக்க முடிகின்றது.

(அ) இச்சூழ்நிலையில் எவ்வாறான கணக்காய்வு அபிப்பிராயத்தை நீர் சிபார்சு செய்வீர்? (03 புள்ளிகள்)

(ஆ) வரையறுத்த ABC கம்பனிக்கு உம்மால் வரையக்கூடிய தொடர்புடைய கணக்காய்வு அபிப்பிராயப் பந்தியைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. வரையறுத்த கம்பனியொன்றின் 31 மார்ச் 2010 இல் முடிவடையும் வருடத்திற்கான சொத்துக்களை மெய்ஆய்வினை மேற்கொள்ளுமாறு உம்முடைய சிரேஷ்ட கணக்காய்வாளர் உம்மைக் கேட்டுக்கொள்கின்றார்.

(அ) பின்வரும் விடயங்ளின் பௌதீக மெய்ஆய்வு தொடர்பான பிரமாணங்களைத் தருக.

- நிலையான சொத்தும் நடைமுறைச் சொத்தும்
- வருமானங்களும் செலவுகளும்

(04 புள்ளிகள்)

(ஆ) சிறந்த முறையில் சரக்கு இருப்புகளை மெய்ஆய்வு செய்கையில் கணக்காய்வாளர் சில கணக்காய்வு செய்முறைகளை பின்பற்றுமாறு வேண்டப்படுகின்றனர். அவையாவன (i) மெய்ஆய்வுக்கு முன் (ii) மெய்ஆய்வின்போது (iii) மெய்ஆய்வு முடிந்த பின் என சரக்கிருப்புக் கணக்காய்வின்போது அவதானிக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு கட்டத்திலும் மூன்று (03) கணக்காய்வு செய்முறைகளை அடையாளப்படுத்துக. (04 புள்ளிகள்)

(இ) மாதிரி பரிசீலனைத் தெரிவில் பயன்படுத்தப்படும் நான்கு முக்கிய விடயங்களை அடையாளப்படுத்துக. (04 புள்ளிகள்)

(ஈ) முகாமையினால் ஒதுக்கம் / ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் காலவதியான அல்லது மிகக் குறைவாகப் பயன்படுத்தப்படும் பொருட்களை அடையாளம் காண உம்மால் பயன்படுத்தப்படும் இரண்டு (02) படிமுறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 16 புள்ளிகள்)

06. பின்வரும் சொற்றொடர்களை விளக்குக.

(அ) கணக்காய்வு - மீளாய்வு

(ஆ) வெட்டித்தவிர்த்தல் செய்முறை – பகுப்பாய்வு மீளாய்வு செய்முறை

(இ) நிரந்தரக் கோவை – தற்காலிக கோவை

(ஈ) இணக்கச் சோதனை – அகக் கட்டுப்பாட்டுச் சோதனை

(உ) இயல்பாகக் காணப்படும் இடர் - அகக் கட்டுப்பாட்டு முறைமை இடர்.

(4 x 5 = 20 புள்ளிகள்)

***